
# இயேசு கிறிஸ்து யார் ?

## Who is Jesus Christ ?

J.C. Choate



தமிழ், ஆங்கில தபால்வழி பைபிள் பாடங்கள், பத்திரிக்கைகள் பெற
**கிருபையுள்ள வார்த்தை**
45 C/1, சர்ச் சந்து, காரனேசன் தெரு, அரசரடி
மதுரை – 625 016. போன் : 92 4421 4421, 92 4431 4431
E-mail : obey2jesus@gmail.com

# இயேசு கிறிஸ்து யார் ?

## Who is Jesus Christ ?

இயேசு கிறிஸ்து என்ற பெயரை, இன்று உலகில் ஒரு சிலரே கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள். அநேகர் நிச்சயமாக கேள்விப்பட்டிருப்பார்கள். ஆனாலும், அவரைப் பற்றி கேள்விப்பட்டிருக்கும் அநேகர், அவரை யார் என்று உண்மையாக அறிந்திராமல் குழப்பத்தில் உள்ளனர். கோடிக்கணக்கானவர்கள் அவரை நம்புகின்றனர். இன்னும் கோடிக்கணக்கானவர்கள் அவரை நம்புவதில்லை. யார் இந்த இயேசு கிறிஸ்து?

**ஆரம்பத்தில் இயேசு கிறிஸ்து கடவுளுடன் கூட இருந்தார்.**

இயேசுவை, கடவுளுடைய மகிமையின் பிரகாசமும் அவருடைய தன்மையின் சொரூபமுமானவர் என்று எபிரெயர் 1:3 விளக்குகிறது. இயேசுவை "வார்த்தை" என்று குறிப்பிடும் யோவான் 1:1, அவரை கடவுளுடன் ஆரம்பத்தில் இருந்தவர் என்றும், அவரை கடவுள் (தேவன்) என்றும் குறிப்பிடுகிறது. அப்படியானால், பிதாவாகிய கடவுள் மற்றும் பரிசுத்த ஆவியானவருடன் அவரும் கடவுள் குடும்பத்தில் ஒருவராக உள்ளார். பிதாவாகிய கடவுள் ஆரம்பமும் முடிவும் இல்லாதவராய் நித்தியமானவர் என்று பைபிளில் விளக்கப்படுவதால், அது இயேசு கிறிஸ்துவுக்கும் பொருந்தும் உண்மையாக உள்ளது (ஏசாயா 63:16). அவர் (இயேசு) நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறார் என்றும் (எபி 13:8), கடவுளுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிறார் (அல்லது, துவக்குபவர்) (வெளி 22:13) என்றும் கூறப்படுகிறார்.

**இயேசு கிறிஸ்து எல்லாவற்றையும் படைத்தவர்**

''ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" என்று ஆதி 1:1 ல் வாசிக்கிறோம். தேவன் (கடவுள்) என்பதற்கான எபிரெய வார்த்தை பன்மையில் உள்ளது; மேலும் அந்த வார்த்தையானது பிதா, வார்த்தையானவர் மற்றும் பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூன்று பேரையும் குறிக்கும். ஆதி 1:26 ல் கடவுளாகிய பிதா கூறும்போது, "நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக...." என்று கூறுகிறார். மேலும் பவுல் கொலே 1:16, 17ல் இயேசு கிறிஸ்துவைக் குறித்து கூறுகையில், ".....சகலமும் அவரைக் கொண்டு, அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. இவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது". என்கிறார்.

**இயேசு கிறிஸ்து, பூமிக்குரிய தகப்பன் இல்லாதவராக, கடவுளுடைய வல்லமையினால் கன்னி மரியாளிடம் பிறந்தார்.**

இவருடைய தனித்தன்மை வாய்ந்த பிறப்பைப் பற்றி ஏசாயா என்ற தீர்க்கதரிசி பல நூற்றாண்டுகளுக்கு முன் தீர்க்கதரிசனம் உரைத்துள்ளார். "ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்". மேலும் மத் 1:20,21ல் ''........அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது. அவள் ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான்" என்று கூறுகிறது. இந்த வசனங்களில் இருந்து, இயேசு அற்புதவிதமாக பிறந்தவர் என்றும், ஆதலால் அவர் சாதாரண மனிதனுக்கு அப்பாற்பட்டவர் என்றும் பார்க்கிறோம்.

**இயேசு கிறிஸ்து கடவுளுடைய (பிதா) குமாரனாயிருந்தார் ;**

மேலும் அவர், தேவத்துவத்தில் தனக்கிருந்த உரிமைகள் மற்றும் வல்லமையை வெறுமையாக்கி, பிதாவாகிய கடவுளுக்கு தன்னை கீழ்படுத்தி, தன்னுடைய மாம்ச பிறப்பின் மூலம் அவர் மனிதர்களின் சகோதரரானார் (பிலி 2:3-8). மனிதனை அவனுடைய பாவத்திலிருந்து காப்பாற்றும்படி இயேசு இவ்வுலகத்திற்கு வந்தார். "தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்" என்று யோ 3:16,17 கூறுகிறது. மேலும் கிறிஸ்து தாமே கூறுகையில், "இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்" என்றார்.

**இயேசு கிறிஸ்து, தன்னை தேவனுடைய (கடவுள்) குமாரன் என்று நிரூபிப்பதற்காக அற்புதங்களை செய்தார்.**

இயேசுவினுடைய அற்புதங்களைப் பற்றி யோவான் இவ்வாறு கூறுகிறார், "இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது" என்றார் (யோ 20:30,31).

**இயேசு கிறிஸ்து, தன்னை விசுவாசிக்கும் அனைவரும் இரட்சிக்கப்படும்படியாகவும் நித்திய வாழ்விற்கான நம்பிக்கையை அடையும்படியும், சிலுவையில் மரித்தார்.**

"அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்கு தெரியப்படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு, அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்தபிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றபடி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே... கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில் உயிர்தெழுந்து, (1 கொரி 15:1-4) என்ற அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தைகளை வேதத்திலே வாசிக்கின்றோம்.

**இயேசு கிறிஸ்து, "என் சபை" என்று, தான் அழைத்த தன்னுடைய குடும்பத்தினால், கீழ்படிந்தவர்களை இரட்சிக்கும்படி வாக்குக் கொடுத்தார்.**

(மத் 16:18). அவர் தம்முடைய ஜனத்திற்காக மரித்தார் ; மேலும் அவருடைய இரத்தத்தினாலே கழுவப்பட்டவர்கள் அனைவரும் இரட்சிக்கப்பட்டு அவருடைய சபையில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். அந்த சபையானது அவருடைய சரீரமென்று அழைக்கப்படுகின்றது ; மேலும் அவர் அதற்கு தலையாக இருக்கின்றார். அந்த சபையானது அவருடைய பெயரை தரித்துக்கொண்ட, கிறிஸ்துவின் சபை என்று அழைக்கப்படும் அவருடைய மணவாட்டியாக உள்ளது (ரோ 16:16 ; எபே 5:23, 25 ; அப் 2:47 ; எபே 3 :15 ; அப் 4:12). ஒரு நாளில் இயேசு, இந்த அவருடைய இரட்சிக்கப்பட்ட மக்கள் கூட்டத்திற்காக (சபை) வருவார்.

**இயேசு கிறிஸ்து, தேவத்துவத்தில் (பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர்), இரண்டாம் நபராவர் (மத் 28:19,20)**

ஒரே ஒரு கடவுளும் (பிதா), ஒரே ஒரு ஆண்டவரும் (கிறிஸ்து) மற்றும் ஒரே ஒரு ஆவியும் (பரிசுத்த ஆவியானவர்) உள்ளனர் (எபே 4:1-6). பரலோகத்திலும், பூமியிலும் கிறிஸ்துவுக்கே சகல அதிகாரமும் உண்டு (மத் 28:18). அவர் தற்போது பிதாவினுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்து, இராஜாதி இராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தராகவும் ஆளுகை செய்கிறார் (1 தீமோ 6:15).

ஒரு நாளில் அவர் தம்முடைய ஜனமாகிய சபையை பரலோகத்திற்கு அழைத்துக்கொண்டு போக வருவார்; மேலும் அவர்கள் அங்கு சதாகாலமும் வாழ்வார்கள். "....அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்" (எபே 5:25-27).

"உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு ; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன் ; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலேயே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்". என்று இயேசு வாக்களித்துள்ளார் (யோ 14:1-3).

நீங்கள் இயேசுவை நம்புகிறீர்களோ? அவர், யோவான் 8:24ல் எச்சரித்தது என்னவெனில், "....நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார்''. நாம் அவரை விசுவாசிக்கிறவர்களானால், அவருக்கு கீழ்படிவோம் (மாற்கு 16:16), மேலும் அவருக்கு உண்மையுள்ளவர்களாய் நம்முடைய மரணபரியந்தம் இருப்போம் (வெளி 2:10). "என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும் (யோவான் 12:48) என்றும் இயேசு எச்சரித்துள்ளார்.

**இந்த இயேசு கிறிஸ்துவினால் கிடைக்கும் பாவ மன்னிப்பையும், பரிசுத்த வாழ்வையும், பரலோக பாக்கியத்தையும் பெற எங்களை தொடர்பு கொள்ளுங்கள் !**

**கிருபையுள்ள வார்த்தை** T.V. நிகழ்ச்சிகள்

தமிழன் T.V.

ஞாயிற்றுக்கிழமை காலை 6-45 மணி
வெள்ளிக்கிழமை காலை 6-00 மணி

இப்பகுதியில் எங்களுடன் தொடர்பு கொள்ள :

5000 copies 18/1/14